**சீத்தாவக்கபுர நகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீத்தாவக்கபுர நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள சீத்தாவக்கபுர நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு கொள்கைகள்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 2017 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கீழே குறிப்பிடப்படும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொடர்புடைய பிரிவின் கீழ் கொண்டுவரப்படாத சொத்துக்கள் யாவும் நடைமுறையல்லா சொத்துக்களாக வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், வருடாந்தம் காலாவதியாகின்ற கூட்டுப்பெறுமதி ரூபா 27,163,088 ஆன 05 நிலையான வைப்புக்களின் பெறுமதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023.12.31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்படாத வீதிகள், மதகுகள், பாலங்களுக்காக கடன் கொடுத்தோராக ஒதுக்கப்பட்ட ரூபா 4,057,431 | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறை வேலை கணக்கிற்கு பதிலாக வீதிகள், மதகுகள் மற்றும் பாலக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டில் நடைமுறை வேலை அபிவிருத்தி வேலைகளுக்காக கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்ட ரூபா 2,221,929 பழுதுபார்த்தல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இது சரிசெய்யப்படும். | மூலதன சொத்துக்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கட்டிட நிர்மாணத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,212,780 தொகை, வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023.12.31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் போது நகர சபை கட்டிடத்திற்காக அதிகரித்து கணக்கு வைக்கப்பட்ட ரூபா 107,814 இற்கு பதிலாக ரூபா 3,098,533 தொகை கட்டிட கணக்கில் செலவு வைத்ததன் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 2,990,719 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் பெறுமானத் தேய்வு பெறுமதியும் ரூபா 74,768 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023.12.31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | 2022 ஆம் ஆண்டின் கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட 2023 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் ஸ்தாபிக்கப்படாத ரூபா 800,000 பெறுமதியான நூலக மென்பொருள் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் பாதீட்டில் அதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 800,000 தொகை 2022 ஆம் ஆண்டிற்காக கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டில் கடைகளுக்காக பெறப்பட்ட முற்பண தொகை ரூபா 5,119,500 மீண்டெழும் அல்லாத கணக்கிற்காக அரசாங்கத்தில் இருந்தான மாற்றல்களில் | கடைகளுக்காக ஒரே தடவையில் கிடைக்கின்ற கடை வாடகை வருமானத் தலைப்பு 115-06-5200 இல் | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருந்தது. | உள்ளடக்கப்பட்டுள்ள துடன், பெறுவனவுகள் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது குறிப்பு இலக்கம் 5 இன் கீழ் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்தில் இருந்து வழங்கப்பட்ட மாற்றல்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு ரூபா 1,986,381 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வு கணிப்பிடுதல் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஏ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மீண்டெழும் அல்லாத அரசாங்கத்தில் இருந்து கிடைத்த மாற்றல்களின் பெறுமதி ரூபா 7,877,740 இற்கு உரிய 2022 ஆம் ஆண்டின் போது வருமானத்திற்கு மாற்றப்பட வேண்டிய பெறுமதி ரூபா 787,774 ஆக இருந்த போதும், ரூபா 12,549,756 வருமானக் கூற்றில் மாற்றப்பட்டதன் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 11,761,982 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 28,008,185 ஆக இருந்ததுடன், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 27,865,707 ஆனமையால் ரூபா 142,478 வேறுபாடு காணப்பட்டது. | 2022.12.31 இல் உள்ளவாறு வங்கி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 27,865,707.00 கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | வேறுபாட்டிற்கான காரணங்களை பரீட்சித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>---------------------------- | | | |
| நிதிப் பிரமாணம் 571 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 27,732,700 பெறுமதியான 03 வருடங்களுக்கு மேற்பட்ட நானாவித வைப்புக்கள் ஓய்வு பெறச் செய்யப்பட்டிருக்க வில்லை. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வருடங்களுக்கு மேற்பட்ட நானாவித வைப்புக்களுக்காக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்புக் கணக்கு மீதிகள் ஓய்வு பெறச் செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,143,714 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,239,840 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 | ரூபா' 000 |
| (i) | ஆதன வரியும் வரியும் | **32,211** | **32,142** | **22,543** | **28,955** | **22,390** | **31,347** | **26,492** | **19,356** |
| (ii) | வாடகை | **41,165** | **31,367** | **33,607** | **4,490** | **45,000** | **31,096** | **10,684** | **9,439** |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | **1,293** | **237** | **1,095** | **-** | **1,397** | **588** | **588** | |
| (iv) | ஏனைய வருமானம் | **13,407** | **30,821** | **13,206** | **-** | **6,061** | **25,742** | **5,742** | **24,946** |
| | மொத்தம் | **88,076** | 94,567 | 70,451 | 33,445 | 74,848 | 88,773 | 43,506 | 53,741 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய ஆதனவரி வருமானம் ரூபா 23,784,454 ஆகும். | உரிய நிலுவை பணம் சபையின் உத்தியோகத்தர்களின் ஊடாக சேகரிக்கப்படுவதுடன், நடமாடும் சேவை வீட்டுக்கு வீடு செல்லுதல், சிவப்பு அறிவித்தலை விநியோகித்தலை மேற்கொண்டு இந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 4,491,950 ஆக இருந்ததுடன், இந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகை செலுத்தாமல் புறக்கணித்தவர்களுக்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை விருந்தினர் விடுதி வாடகை ரூபா 7,075,592 ஆகும். | உரிய நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் சில கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு கடிதம் மூலம் உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க நிறுவனத்திற்கு எதிராக இன்னுமொரு அரச நிறுவனத்தினால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்க முடியாத வகையில் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டமையால் உரிய விருந்தினர் விடுதி வாடகை தொடர்பாக கௌரவ நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படாதிருந்ததுடன், சகல அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ரூபா 516,862 பெறுமதியான களியாட்ட வரி பெறுமதி திசெம்பர் 31 இல் உள்ளாவாறு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 516,862 களியாட்ட வரி நிலுவைத் தொகை உரிய களியாட்ட வரி அறவிடல் பதிவேட்டின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது நகர சபையினால் மேற்கொள்ளப்பட்ட கட்டிடம் மற்றும் காணி மெய்மையாய்வின் போது ஆதனங்கள் தொடர்பாக பரப்பளவை இனங்காண முடியாமை, காடுகள் வளர்ந்து பழுதுபார்க்க வேண்டியிருந்த சனசமூக மண்டபங்கள் மற்றும் அனுமதியற்ற நிர்மாணங்கள் | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நகர சபை அதிகார சபை அதிகாரப் பிரதேசத்தில் காடு வளர்ந்துள்ள சனசமூக மண்டபங்களை சுற்றி சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், பழுதுபார்க்க வேண்டிய | சபை சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக பராமரிப்புக்கள் மேற்கொள்ள வேண்டிய பொது இடங்கள் காணப்படுகின்றமை அறிக்கையிடப்பட்ட போதிலும், அந்த ஆதனங்களை இனங்காணக் கூடிய வகையில் வகைப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சனசமூக மண்டபங்கள் காணப்படுகின்ற நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் எதிர்காலத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் வருடத்தின் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 12,146,371 ஆகும். | 2022.12.31 இல் உள்ளவாறு முன்கொண்டுவரப்பட்ட மொத்த கடன்கொடுத்தோர் மீதி ரூபா 12,252,370 ஆக இருந்ததுடன், 2023.04.20 ஆம் திகதி வரையில் இந்த மீதி ரூபா 12,146,371 ஆக இருந்ததை அறியத்தருகின்றோம். இந்த கடன்கொடுத்தோர் மீதி எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1989 யூன் 09 ஆம் திகதிய இலக்கம் 248/334 என்ற உடன்படிக்கையின் பிரகாரம் 1988 யூலை 01 ஆம் திகதி முப்பது வருட குத்தகை அடிப்படையின் கீழ் சபைக்குச் சொந்தமான நிலம் இலங்கை வங்கிக்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 80,000 ஆக இருந்த போதிலும், 2018 இல் வாடகைக் காலம் முடிவடைந்த பின்னர் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 475,000 ஆக இருந்தது. புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்படாமையின் காரணமாக 2018 யூலை 01 முதல் 2022 | தற்போது அவிஸாவளை கௌரவ நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 29081/19 இன் கீழ் வழக்கொன்று காணப்படுவதுடன் உரிய வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நவம்பர் 18 வரை அறவிட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 22,561,718 ஆகும்.

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2021 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 4,522,729 பெறுமதியான அலுவலக கட்டிடத்தில் மேல் மாடியில் உள்ள ஆவண காப்பகம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாமல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | அலுவலக கட்டிடத்தில் மேல்மாடியில் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக மாகாண சபையின் கீழ் நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், அந்த நிதிஏற்பாடு கிடைக்காமையினால் சபை நிதியத்தை பயன்படுத்தி ஆவண காப்பகத்தின் ஒரு பகுதியை பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய வகையில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேல் மாடியின் மிகுதி வேலைகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டவுடன் உடனடியாக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதி ஏற்பாட்டை ஒதுக்கி சபை நிதியத்தில் இருந்து மிகுதி வேலைகளை விரைவாக நிறைவேற்றுதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நகர சபை நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்ற 06 உத்தியோகபூர்வ இல்லங்களின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 01 – 04 வருடங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்த போதும், மீண்டும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2022 சனவரி 03 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து உத்தியோகபூர்வ இல்லத்தினை மீண்டும் | உடன்படிக்கை காலத்தை விஞ்சி உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற ஊழியர்களுக்கு விலகிச் செல்லும் அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது. எனினும், உத்தியோகபூர்வ இல்லங்கள் சபைக்கு மீண்டும் கையளிக்கப்படவில்லை. இந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் நிர்வாக உரித்து மாத்திரம் சபைக்குச் சொந்தமாக இருந்தமையால் இது தொடர்பாக சட்டரீதியான | உத்தியோகபூர்வ இல்லங்களின் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், உடன்படிக்கையை நாளது வரையாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. | |
| (ஆ) | நகர சபை நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்ற ஆராதனா கந்த வத்தையில் 04 ரூட் 12 பேர்ச் அளவுடைய பொது வசதிகள் உடைய 02 காணிகள் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இதில் 58.18 பேர்ச் இல் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் , அவற்றை அகற்றி பொது வசதிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆராதனா கந்தவத்தை நிலக் கூறுகள் இரண்டும் அளவிடை நடவடிக்கைகளை செய்து நில வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு இந்த நிலப் பகுதி இரண்டினதும் உரித்து சபைக்குச் சொந்தமாக எழுத்து மூலம் காணப்படாமையால் பிரச்சினையாக உள்ளது. | ஆதனங்களை கையேற்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமாக இனங்காணப்பட்ட 141 ஆதனங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தது டன், 30 ஆதனங்களின் உரித்தை மாத்திரம் சட்டரீதியாக்கிக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | நகர சபைக்குச் சொந்தமானதாக இனங்காணப்பட்ட 141 ஆதனங்களுக்கு இடையே 111 ஆதனங்களுக்காக சட்டரீதியான ஆவணங்கள் தயாரிக்க வேண்டியிருந்தது. ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்தக் கூடிய மற்றும் உறுதிப்படுத்த முடியாத சகல ஆதனங்களுக்கும் அளவிடல் நடவடிக்கைகளைச் செய்து நில வரைபடம் தயாரிப்பதற்கும் வெளியீட்டு உரித்துறுதியை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு 42 பொது மக்கள் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் 21 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்குரிய பொது மக்கள் முறைப்பாட்டு பதிவேட்டின் பிரகாரம் 42 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் 21 முறைப்பாடுகளுக்கு தீர்வினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |